# அன்புக்குப் பாடல் பாடுவேன்

அன்புக்குப் பாடல் பாடுவேன்
நெஞ்சத்தில் மன்னனை நாடுவேன்
இன்பத்தின் ஊற்று யேசுவே - உன்
இன்புகழ் பாடி மகிழ்ந்திருப்பேன்

**1**
வேதனை ஆயிரம் நானடைந்தேன் - அந்த
வேளையில் ஊன்றுகோல் நீ தெளிந்தேன்(2)
உயிரின் வார்த்தையே
எந்தன் உள்ளத்தில் வாருமே (2)
உன் நாமம் பாடுகையில்
என் நாவு இனித்திடுமே

**2**
கல்வாரி மலையில் உன்னுயிர் தந்ததும்
எல்லோர்க்கும் வாழ்வாய் எழுந்ததுவும் (2)
அன்பின் ஆட்சியாம்
என்றும் இன்பக் காட்சியாம் (2)
சொல்லில்லை கூறிடவே
இசையில்லைப் பாடிடவே